# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12.835 – 1961 දෙසැම්බර් 27 වැනි බදාදා – 27.12.1961

12,835 ம் இலக்கம் — 1961 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. கே. டி. 97. உப உணவுப் பொருட்கள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் வாசிக்கப்பட்ட 4 ம் பிரிவுடன் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கண்டி மாவட்டத்திற்கும் நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரியின் பிரிவுக்கும் பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) சிரில் ஜோசப சேரசிங்க ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1961 ம் ஆண்டு ஆனி மாதம் 2 ந் திகதி வெளிவந்த 12,460 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கே. டி. 89 ம் இலக்க விலைக் கட்டளையையும் 1961 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ந் திகதி வெளிவந்த 12,692 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கே. டி. 94 ம் இலக்க விலைக் கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடுதலான மொத்த விலையோடும், ஒரு நிகர இருத்தலின் சில்லறை வியாபார விலையோடும், இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையில் 2 ம் 3 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கிற தொகையைக் கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை இந்த விலைகளுக்குக் கூடுதலாக கண்டி பரிபாலன மாவட்டத்திலுள்ள உடுநுவர, யட்டிநுவர பிரிவு அதிகாரியின் எல்லைக்குள்ளும் சங்கவெட்ட கோறளை கண்டி முனிசிப்பல் எல்லைக்குள்ளும் விற்றலாகாது ;

(3) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக் கூடுதலான மொத்த விலையாகும். ஒரு நிகர இருத்தலின் சில்லறை வியாபார விலையோடும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கிற தொகையைக் கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை இதன் விலைகளுக்குக் கூடுதலாக கண்டி பரிபாலன மாவட்டத்திலுள்ள பாதஹேவாஹெட்ட, பாத்த தும்பறை, மெததும்பர, ஹாரிஸ் பத்து, தும்பனை, உடபலாத்த பிரிவு அதிகாரிகளின் பகுதிகள், எல்லைக்குள் விற்றலாகாது ;

(4) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 3 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக் கூடுதலான மொத்த விலையோடும், ஒரு நிகர இருத்தலின் சில்லறை வியாபார விலையோடும், இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 3 ம் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கிற தொகையைக் கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். 3 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை இதன் விலைகளுக்குக் கூடுதலாக—

(அ) கண்டி பரிபாலன மாவட்டத்திலுள்ள உடபுலத்கம உடதும்பர பிரிவு அதிகாரியின் பிரிவுகள் ;

(ஆ) நுவரெலியா பரிபாலன மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரியின் பகுதிகளின் எல்லைக்குள்ளும் விற்றலாகாது ;

(5) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும்,

(ஆ) குறித்த அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் மொத்த அந்தர் ஒன்றுக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) குறித்த அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து எவராவது இக் கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எந்த ஒரு இடத்திலும் விற்றலாகாது என இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் எப்பொருளையேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளை சிறு தொகையையும் இக்கட்டளையால் அப் பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளை அல்லது பொருட்களை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட பொருளின் அளவு (நிறையில்) ;

(இ) விற்ற பொருட்களுக்கு கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(9) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கப்படும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(10) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " " இரு. " அல்லது " ரு " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ந் திகதி பி. ப. 3 மணிக்குக் கண்டிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜீ. ஜே. சேரசிங்க,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கண்டி மாவட்டமும்,
நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்ட பிரிவு
அதிகாரியின் பகுதியும்.

## 1 ம் அட்டவணை

(கண்டி பரிபாலன மாவட்டத்திலுள்ள கண்டி நகரசபை எல்லை, இடங்கள் : கங்கவத்தைக் கோரளையும் உடுநுவர, யட்டிநுவர பிரிவு அதிகாரியின் பகுதியும்)

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த அந்தர் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக் கூடுதலான மொத்த விலையுடன் கூட்டவேண்டிய தொகை<br>ரூ. ச. | பத்தி 3<br>நிகர றாத்தல் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய தொகை<br>ரூ. ச. |
|---|---|---|
| வெங்காயம் (ஈரவெங்காயமும் சிக்பெல்லாப்பூரும் தவிர்ந்த ஏனைய இரகங்கள்) | 2 0 | 0 2 |
| உருளைக்கிழங்கு | 2 0 | 0 2 |
| உருளைக்கிழங்கு (இந்தியன்) | 2 0 | 0 2 |
| மேட்டுப்பாளையம் உள்ளி (பம்பாய்) | 3 0 | 0 3 |
| செத்தல் மிளகாய்— சன்னம் 1 ம் இரகம், சன்னம் 2 ம் இரகம், முண்டு 1 ம் இரகம், முண்டு 2 ம் இரகம், சந்தகா, நந்தபார், அகோலா, சீயம், ஜாவா | 4 0 | 0 4 |
| நற்சீரகம் | 3 0 | 0 3 |
| மஞ்சள் | 3 0 | 0 3 |
| கொத்தமல்லி | 3 0 | 0 2 |
| முழு உளுந்து | 2 0 | 0 3 |
| பாசிப்பயறு | 3 0 | 0 2 |
| துவரம்பருப்பு | 2 0 | 0 2 |
| கடலைப்பருப்பு | 3 0 | 0 3 |
| சித்தாமணிக்கடலை | 3 0 | 0 3 |
| புளி | 3 0 | 0 3 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றல் ஆகாது.

## 2 ம் அட்டவணை

(கண்டி பரிபாலன மாவட்டத்திலுள்ள பாதஹேவாஹெட்ட, பாத்ததும்பரை, மெததும்பர, ஹாரிஸ்பத்து, தும்பனே, உடபலாத்த பிரிவு அதிகாரிகளின் பகுதிகள்)

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த அந்தர் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக் கூடுதலான மொத்த விலையுடன் கூட்டவேண்டிய தொகை<br>ரூ. ச. | பத்தி 3<br>நிகா ருத்தல் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நிய மிக்கப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய தொகை<br>ரூ. ச. |
|---|---|---|
| வெங்காயம் (ஈரவெங்காயமும் சிக்பெல்லாப்பூர்னும் தவிர்ந்த ஏனைய இரகங்கள்) .. .. .. | 2 20 .. | 0 3 |
| உருளைக்கிழங்கு .. .. .. | 2 20 .. | 0 3 |
| உருளைக்கிழங்கு (இந்தியன்) மேட்டுப்பாளையம் .. | 2 20 .. | 0 3 |
| உள்ளி (பம்பாய்) .. .. .. | 3 20 .. | 0 4 |
| செத்தல் மிளகாய்— | | |
| சன்னம் 1 ம் இரகம் | | |
| சன்னம் 2 ம் இரகம் | | |
| முண்டு 1 ம் இரகம் | | |
| முண்டு 2 ம் இரகம் | | |
| சந்தகா | 4 20 .. | 0 4 |
| நந்தபார் | | |
| அகோலா | | |
| சீயம் | | |
| ஜாவா | | |
| நற்சீரகம் .. .. .. | 3 20 .. | 0 4 |
| மஞ்சள் .. .. .. | 3 20 .. | 0 4 |
| கொத்தமல்லி .. .. .. | 3 20 .. | 0 4 |
| முழு உளுந்து .. .. .. | 2 20 .. | 0 3 |
| பாசிப்பயறு .. .. .. | 3 20 .. | 0 4 |
| துவரம்பருப்பு .. .. .. | 2 20 .. | 0 3 |
| கடலைப்பருப்பு .. .. .. | 3 20 .. | 0 4 |
| சிந்தாமணிக்கடலை .. .. .. | 3 20 .. | 0 4 |
| புளி .. .. .. | 3 20 .. | 0 4 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றல் கூடாது.

## 3 ம் அட்டவணை

(கண்டி பரிபாலன மாவட்டத்திலுள்ள உடபுலத்கம உடதும்பர பிரிவு அதிகாரியின் பிரிவுகள், நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரியின் பகுதி)

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த அந்தர் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக் கூடுதலான மொத்த விலையுடன் கூட்டவேண்டிய தொகை<br>ரூ. ச. | பத்தி 3<br>நிகா ருத்தல் ஒன்றுக்கு கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நிய மிக்கப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய தொகை<br>ரூ. ச. |
|---|---|---|
| வெங்காயம் (ஈரவெங்காயமும் சிக்பெல்லாப்பூர்னும் தவிர்ந்த ஏனைய இரகங்கள்) .. .. .. | 2 40 .. | 0 3 |
| உருளைக்கிழங்கு .. .. .. | 2 40 .. | 0 3 |
| உருளைக்கிழங்கு (இந்தியன்) மேட்டுப்பாளையம் .. | 2 40 .. | 0 3 |
| உள்ளி (பம்பாய்) .. .. .. | 3 40 .. | 0 4 |
| செத்தல் மிளகாய்— | | |
| சன்னம் 1 ம் இரகம் | | |
| சன்னம் 2 ம் இரகம் | | |
| முண்டு 1 ம் இரகம் | | |
| முண்டு 2 ம் இரகம் | | |
| சந்தகா | 4 40 .. | 0 5 |
| நந்தபார் | | |
| அகோலா | | |
| சீயம் | | |
| ஜாவா | | |
| நற்சீரகம் .. .. .. | 3 40 .. | 0 4 |
| மஞ்சள் .. .. .. | 3 40 .. | 0 4 |
| கொத்தமல்லி .. .. .. | 3 40 .. | 0 4 |
| முழு உளுந்து .. .. .. | 2 40 .. | 0 3 |
| பாசிப்பயறு .. .. .. | 3 40 .. | 0 4 |
| துவரம்பருப்பு .. .. .. | 2 40 .. | 0 3 |
| கடலைப்பருப்பு .. .. .. | 3 40 .. | 0 4 |
| சிந்தாமணிக்கடலை .. .. .. | 3 40 .. | 0 4 |
| புளி .. .. .. | 3 40 .. | 0 4 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றல் ஆகாது.

12–1927.

உணவு விலைக்கட்டளை இல. எனம். 6/61 உப உணவுப் பொருட்கள் (மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு)

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு அம்பாறை உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி ருஜா பேட்றம் மலிகஸ்கே கோறளே ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1950ம் ஆண்டின் 29ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மொத்த வியாபாரி ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாக விதிக்கப்பட்ட விலையுடன் இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 2ம், 3ம், 4ம் பத்திகளில் உள்ள விலைகளுடன் கூட்டிவரும் விலையை மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், முதலாம் அட்டவணையிலுள்ள 1ம், 2ம், 3ம் பகுதிகளில் விபரித்துள்ள இடங்களில், இரண்டாம் அட்டவணையில் 1ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக் கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை இவ் விலைகளுக்கு கூடுதலாக விற்கக் கூடாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(2) 1950ம் ஆண்டின் 29ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள், சில்லறை வியாபாரி ஒருவர் நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாக விதிக்கப்பட்ட விலையுடன் இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 5ம் பத்திகளில் உள்ள விலையுடன் கூட்டிவரும் விலையை நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் முதலாம் அட்டவணையிலுள்ள 4ம் பத்திகளில் விபரித்துள்ள இடங்களில் இரண்டாம் அட்டவணையில் ஒராம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை இவ்விலைக்குக் கூடுதலாக விற்கக்கூடாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) இரண்டாம் அட்டவணையில் 1ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிற்றோ கருவாட்டையோ திருப்பிவிற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரையோ அல்லது அதற்குக் கூடுதலான தொகையையோ ஒரே முறையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(ஆ) இரண்டாம் அட்டவணையில் 1ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள எத்தொகையான மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிற்றோ கருவாட்டையோ ஒரு மொத்த அந்தருக்குக் குறைவானதொகையில் உபயோகத்திற்காக அல்லது பாவனைக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடியவிலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை வேறொரு பொருளுடன் சேர்த்து விற்றல் ஆகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த இரண்டாம் அட்டவணையில் 1ம் பத்தியில் விபரித்துள்ள மாசிக்கருவாட்டிற்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்று பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது "அவோர்டுபோஸ்" எடுத்தல்ளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் மாசிக்கருவாட்டை அல்லது பொனிற்றோ கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்:

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்பனைசெய்யப்பட்ட மாசிக்கருவாட்டின் அல்லது பொனிற்றோ கருவாட்டின் தொகை (நிறையில்),

(இ) விற்பனைசெய்யப்பட்ட தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலையும்,

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) இரண்டாம் அட்டவணையின் 1ம் பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு விற்கப்படுமிடத்து, குறிப்பிட்ட அட்டவணையின் 2ம், 3ம், 4ம், 5ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

ஆர். பி. எம். கோறளே,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு)
அம்பாறை மாவட்டம்.

1961ம் ஆண்டு மார்கழி மாதம் 18ந் திகதி,மு. ப. 11 மணிக்கு அம்பாறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

### முதலாம் அட்டவணை

| 1ஆவது பகுதிக்குள் அடங்கிய இடங்கள் | 2ஆவது பகுதிக்குள் அடங்கிய இடங்கள் | 3ஆவது பகுதிக்குள் அடங்கிய இடங்கள் | 4ஆவது பகுதிக்குள் அடங்கிய இடங்கள் |
|---|---|---|---|
| கரவாகு, சம்மாந்துறை பற்று பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் | அக்கரைப்பற்று பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவு களில் | பாணமைப்பற்று பிரிவுக்காரியாதி காரியின் பிரிவுகளில். | கரவாகு, சம்மாந்துறை அக்கரைப் பற்று, பாணமை வேவ்கம்பற்று ஆகிய காரியாதிகாரியின் பிரிவுகளில் |

### இரண்டாம் அட்டவணை

| பத்தி 1 | பகுதி இல. 1 பத்தி 2 | பகுதி இல. 2 பத்தி 3 | பகுதி இல. 3 பத்தி 4 | பகுதி இல. 4 பத்தி 5 |
|---|---|---|---|---|
| பொருட்களின் விபரம் | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விதிக்கப் பட்ட மொத்த வியாபாரி யின் ஆகக்கூடிய விலை யுடன் கூட்டவேண்டிய விலை. | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விதிக்கப் பட்ட மொத்த வியாபாரி யின் ஆகக்கூடிய மொ த்த விலையுடன் கூட்ட வேண்டிய விலை. | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விதிக்கப் பட்ட மொத்த வியாபாரி யின் ஆகக்கூடிய மொ த்த விலையுடன் கூட்ட வேண்டிய விலை. | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விதிக்கப் பட்ட சில்லறை வியா பாரியின் ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டவேண்டிய விலை. |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| மாசிக்கருவாடு அல்லது பொனிற்றோ கருவாடு | 6 00 | 6 20 | 6 50 | 0 07 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும் இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

12–1925

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது